செ.வெ.எண். 369 நாள் - 03.07.2021

நீலகிரி மாவட்டத்தில் நோயாளிகள் எளிதில் பயணம் செய்ய, தமிழகத்திலேயே முதன்முறையாக 6 ஆட்டோ ஆம்புலன்ஸ்களை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.கா.ராமசந்திரன் அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

---

நீலகிரி மாவட்டம், குன்னூர் புனித ஜோசப் பள்ளியில் இன்று (03.07.2021) தமிழகத்திலேயே முதன்முறையாக நோயாளிகள் எளிதில் பயணம் செய்ய ஏதுவாக 6 ஆட்டோ ஆம்புலன்ஸ்களை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.கா.ராமசந்திரன் அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்வில் மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது :-

"மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்றதுடன் கொரோனா தடுப்பு பணிகளில் முழு கவனம் செலுத்திய காரணத்தினாலும், பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டதாலும், இன்று தமிழகம் முழுவதும் இந்த கொடிய நோயிலிருந்து, பாதிக்கப்படும் நபர்களின் எண்ணிக்கை வெகுவாக குறைந்து வருகிறது. மேலும் கொரோனா தொற்று நோயினால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் மருத்துவமனைக்கு சென்றால் அவர்களுக்கு தேவையான படுக்கை வசதிகள், மருத்துவ வசதிகள், ஆக்சிஜன் வசதிகள் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் கிடைக்கும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான தமிழக அரசு உறுதி செய்துள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கொரோனா தொற்று நோயினால், பல்வேறு மாவட்டங்களில் பல்வேறு தளர்வுகளை அறிவித்து, செயல்படுத்திட சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களுக்கு உத்தரவிட்டார். தற்போது நோய்த்தொற்று குறைந்துள்ளதால், பொதுமக்களின் நலன்கருதி, பல்வேறு தளர்வுகள் அறிவித்து உத்தரவிட்டுள்ளார். மேலும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொரோனா மூன்றாம் அலை ஏற்பட்டால், அதிலிருந்து பொதுமக்களை எவ்வாறு பாதுகாக்க வேண்டும் என்பது குறித்து, தொடர்ந்து ஆலோசித்து வருகிறார். மேலும் மருத்துவமனைகள் மற்றும் கொரோனா சிகிச்சை மையங்களில் படுக்கை வசதிகள், மருத்துவ வசதிகள், நோயாளிகளுக்கு தேவையான ஆக்சிஜன் வசதிகள் ஆகியவற்றை தடையில்லாமல் கிடைக்க வேண்டும் என்பதற்காகவும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

நீலகிரி மாவட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, மேற்கொண்ட தொடர் நடவடிக்கையால் கொரோனா தொற்று நோயினால் பாதிக்கப்படும் நபர்களின் எண்ணிக்கை நாள்தோறும் குறைந்து கொண்டே வருகிறது. இருந்த போதிலும் பொதுமக்கள் முகக்கவசம் அணிவது, சமூக இடைவெளியினை கடைப்பிடிப்பது உள்ளிட்ட அரசு தெரிவிக்கும் கொரோனா தொற்று வழிமுறைகளை முழுமையாக கடைபிடிக்க வேண்டும்.

இன்று நீலகிரி மாவட்டம், தமிழகத்திலேயே அனைத்து மாவட்டத்திற்கும் முன்னுதாரணமாக திகழ வேண்டும் என்பதற்காகவும், நோயாளிகள் தங்களது பகுதிகளிலிருந்து எளிதாக மருத்துவமனைக்கு செல்ல வேண்டும் என்பதற்காக தமிழகத்திலேயே முதல்முறையாக நமது மாவட்டத்தில் "ஆட்டோ ஆம்புலன்ஸ்" சேவை திட்டம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. நமது மாவட்டம் மலை மாவட்டம் என்பதால் பல்வேறு கிராமங்களில் சாலைகள் மிகவும் குறுகியதாக உள்ளது. இந்த சாலைகளில் சில இடங்களில் ஆம்புலன்ஸ் வாகனம் செல்வதில் சிரமம் உள்ளதால், இதனை கருத்தில் கொண்டு, இதற்கு தீர்வு காணும் வகையில் AMBU RX என்று அழைக்கப்படும் ஆட்டோ ஆம்புலன்ஸ் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

ஜபல்பூரில் வடிவமைக்கப்பட்ட இந்த 6 வாகனங்களில் ஒன்றின் விலை சுமார் ரூ.3.5 இலட்சம் ஆகும். 470 சிசி திறன் கொண்ட இந்த வாகனம் எளிதாக மலைப்பாதைகளில் பயணம் செய்யும் திறன் கொண்டது. இவ்வாகனத்தில் ஆக்ஸிஜன் வசதி, ஸ்ட்ரெச்சர், நோயாளிகளின் உதவியாளர்களுக்கான இருக்கை, மருத்துவ பெட்டி ஆகிய வசதிகள் உள்ளன. இந்த 6 ஆம்புலன்ஸ்கள் கேத்தி ஆரம்ப சுகாதார மையம், குன்னூர் புஷ்பா மருத்துவமனை, கோத்தகிரி கெ.எம்.எஃப் மருத்துவமனை, குன்னூர் கைண்டர் அறக்கட்டளை, 3 ஸ்டார் நற்பணி இயக்கம், நீலகிரி ஓட்டல் உரிமையாளர் சங்கம் ஆகியோர் மூலமாக ஏழை, எளியோருக்கு சேவை செய்ய வழங்கப்பட்டுள்ளது. சமூக ஆர்வலர் ராதிகா சாஸ்திரி என்பவரின் சீரிய முயற்சியால் பல்வேறு நிறுவனங்களின் பங்களிப்பில் இந்த ஆம்புலன்ஸ்கள் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இம்முயற்சியினை மேற்கொண்ட அனைவருக்கும் எனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன்." என மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.எஸ்.நிர்மலா, குன்னூர் உதவி ஆட்சியர் செல்வி தீபனா விஸ்வேஸ்வரி இ.ஆ.ப., குன்னூர் நகராட்சி ஆணையாளர் திரு.பாலமுருகன், குன்னூர் வட்டாட்சியர் திரு.ஸ்ரீநிவாசன், குன்னூர் வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.ஜனார்த்தனன் மற்றும் பள்ளி முதல்வர் திரு.சாலமன், பொறுப்பாளர் திரு.ஸ்டேன் உட்பட தன்னார்வலர்கள் திரு.சார்லஸ் நாதன், திரு.ஜெபரத்னம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்